தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை 1983 மார்ச் 7

மாசி 23, துந்துபி, திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் ''.

ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாகும். எனவே அந்த ஒழுக்கத்தை உயிரைவிடச் சிறந்ததாகப் போற்ற வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மின்வளர்ப்போர் அபிவிருத்தி அமைப்புகள் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண் 300—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை, பெரியார், கன்னியாகுமரி, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் அபிவிருத்தி அமைப்புகள் ஏற்படுத்தும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இம்மாவட்டங்களில், கீழ்க்காணும் தேதிகளில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகின்றன :—

(1) புதுக்கோட்டை மாவட்டம் 19—6—1982.

(2) பெரியார் மாவட்டம் 1—7—1982.

(3) கன்னியாகுமரி மாவட்டம் 2—6—1982.

(4) வட ஆற்காடு மாவட்டம் 19—5—1982.

[1983 மார்ச் 7

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மீன் வளர்ப்போர் அபிவிருத்தி அமைப்புகள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன ? இதனால் ஏற்படும் நன்மைகள் என்ன ? இதனால் அரசுக்கு எவ்வளவு செலவாகின்றது என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அர்களே, தீவிர மீன் பிடிப்புத் திட்டத்தின் கீழ் மீன் உற்பத்தியை அதிகப்படுத்தவும், அதன் மூலம் அரசின் வருவாயைப் பெருக்கவும், கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தவும், மைய அரசு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அளிக்குமாறு அரசுக்குப் பரிந்துரை செய்தது. அதனுடைய அடிப்படையிலேதான் மைய அரசு, மாநில அரசு ஆகிய இரண்டினுடைய ஒத்துழைப்பினுடைய அடிப்படையில் இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எந்தெந்த ஊர்களிலே தண்ணீர் நிலையாக குளம் குட்டைகளிலே நிறைந்திருக்கும் என்று கண்டறிந்து எதிலே மீன் வளர்க்க முடியும் என்பதை அறிந்து ஆராய்ந்ததற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியுடன் முகமைக்காக உறுப்பினர்கள் மீனவர் வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பிறகு அவர்களுக்குப் பயிற்சி அளித்த பின்னர் இத்திட்டத்திற்கு என தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்கள், அவர்களுக்கு அதிகபட்சமாக பத்து ஆண்டுக் காலம் வரையில் குத்தகைக்கு விடப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், அவர்கள் மீன் வளர்ப்பினைத் தீவிரப் படுத்துவதற்காகப் பல்வேறு வகைகளிலே உதவி செய்வதற்கும் அரசு பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகின்றது. அவர்களுக்கு 75 சதவீத கடனாகவும், 25 சதவீத மானியமாகவும், 1977-78 முடிய 1,000 ரூபாய் அளித்தது. பிறகு 1978-79-லிருந்து 1981-82 முடிய 1,250 ரூபாய் அதிலே 75 சதவீதம் கடன், 25 சதவீதம் உதவி, அதைப்போன்றே 1982-83 ஆம் ஆண்டில் 2,000 ரூபாய் வழங்க முடிவெடுக்கப்பட்டு, 75 சதவீதம் கடனாகவும், 25 சதவீதம் மானியமாகவும் அமையும். ஆகவே, அவர்கள் இதைப் பயன்படுத்தி மீன்வளர்க்க வேண்டுமென்பதுதான் இதனுடைய முக்கிய நோக்கம். ஓரளவுக்கு அது பரவலாக நல்ல பலனை அளித்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கடும் வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் குடிப்பதற்கே போதிய தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நேரத்தில் மீன் வளர்ப்பதற்குப் போதிய தண்ணீர் குளங்களிலேயும், ஏரிகளிலேயும் இருக்கிறதா ? இதனால் மீன் வளர்ப்பதற்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

1983 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்மிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களே, குடிக்கவே தண்ணீர் இல்லை என்று சொல்லிவிட்டதற்குப் பிறகு மீனுக்கு மட்டும் எப்படித் தண்ணீர் கிடைக்கும் என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஆகவே, எந்தெந்த நீர் நிலைகளிலே மீன்வளர்ப் பதற்கேற்ற தண்ணீர் இருக்கிறதோ அங்கு இந்த முகமைகள் பணி யாற்றும். எங்கெங்கு வறண்ட நிலை ஏற்பட்டுள்ளதோ அங்கு மீன் வளர்ப்பு முகமைகள் பணியாற்ற இயலாது. வேறு வகைகளிலே தான், நீர் நிறைந்ததற்கு பிறகுதான் அதிலே பணியாற்ற முடியும்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'மீன் வளர்க்கும் தீவிரத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏற்கெனவே கடந்த ஆண்டு பல்வேறு குளங் களிலே, கல்குளம், தோவாளை போன்ற தாலுக்காக்களிலே எடுத்துக்கொள்ளப்பெற்று, நீர் வற்றாத குளங்கள் இருந்தது. ஆனால் இப்பொழுதுள்ள வறட்சியின் காரணமாக அந்தத் தண்ணீர் பூராவும் வற்றியிருக்கிறது. ஆகவே, அதைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் விவசாயிகள் அந்தப் பணத்தைத் திரும்பக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். எனவே, அந்தப் பணத்தைக் கட்டுவதற்கு நீண்ட காலக் கெடுவிலே ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு தற்போது இல்லை. நிலைமையை விளக்கி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித் தால், அதை ஆராய்ந்து தக்க முடிவை எடுக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே இந்த மீன் வளர்ப்பு பயிற்சி ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த இடத்திலே அது ஆரம்பிக்கப்பட உள்ளது. அதற்காக ஒதுக்கப் பட்ட நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே சென்ற ஆண்டு—நான் முதலிலே குறிப்பிட்டதுபோல் 19—5—1982 அன்று ஆரம்பிக்கப்பட்டது. எந்த எந்த இடம் என்று குறிப்பு இல்லை. ஆனால் நான் முதலில் கூறியபடி நிலையான நீண்ட நாள் தண்ணீர் தங்கக்கூடிய அளவிற்கு எந்தெந்த இடங்கள் இருக் கின்றதோ அந்த இடங்களிலேயும், மீன் வளர்ப்பதற்கு வாய்ப்பு வசதிகள் எங்கே இருக்கின்றதோ அங்கேயும், மீன் வளர்க்கும் உள்ளம் கொண்டவர்கள் யார் யார் இதற்காக முன்வருகிறார் களோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த வகை யிலே வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு, 4,07,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, மீன் வளர்ப்பு பயிற்சிக் கழகத்தின் மூலமாக குட்டைப் பகுதிகளுக்கு மட்டும் உதவி அளிப்பது பற்றிச் சொன்னார்கள். ஆனால் ஏரிப்பகுதி களிலே உதவி அளிக்க முடியாது என்று சொல்கின்ற காரணத்தால் அதை மாற்றி ஏரிப் பகுதிகளுக்கும் உதவி அளிக்க அரசு ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆராயப் படவேண்டிய ஒன்று. அதைப் பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சேர்ந்த காசிமேட்டுப் பகுதியிலே உள்ள கடற் கரைப் பகுதியிலே இறால் மற்றும் உள்ள மீன்களை வளர்ப்பதற் காக இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கான வேலைகளைச் செய்யாமல் நீண்டகாலமாக இருக்கிறது. ஆகவே உடனடியாக அங்கே மீன் வளர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு எந்த அளவுக்கு திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது உள்நாட்டு நீர் நிலைகளின் தன்மையை பொறுத்ததுதான். ஆகவே உள்நாட்டு குளங்கள், ஏரிகள், குட்டைகள் போன்றவற்றிற்காக முகமைகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. சென்னையைப் பொறுத்தவரை, 10 கோடி ரூபாய்ச் செலவில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிவடைந் துள்ளன. மத்திய அரசின் உதவியோடு மாநில அரசும் சேர்ந்து இதிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறது. விரைவிலே இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்படும். இன்னும் சில பல மாதங்களில் முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

சென்னையில் 1982 ஆம் ஆண்டு மே மாதத்தில் மீனவ மகளிர்களுக்கு அளிக்கப்பட்ட தனிப்பயிற்சி

*வினா எண் 301—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மீனளத்துறை இயக்குனர் அலுவலகத் தில் 1982 மே மாதத்தில் மீனவ மகளிர்களுக்கு தனிப்பயிற்சி அளிக்கப்பட்டதா?